<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண். 55/2019</u>

**2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் நாள் புதன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW-1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :செல்வராஜ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :செங்கமலை | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :தழுதாழை | வயது | : /2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

(i) இவ்வழக்கில் நான் 3ம் பிரதிவாதி ஆவேன். கீதா என்பவர் எனது மனைவி ஆவார். அவர் துரைசாமி என்பவரிடம் கிரையம் பெற்ற ராஜன் என்பவருக்கு சொந்தமான கூரை வீடு கிரையம் பெற்றுள்ளார். தாவா சொத்தானது கிரைய ஆவணத்தில் காலி மனையாக பத்திர பதிவு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தானது காலி நத்தம் புல எண்.171/2 என்றால் சரிதான். தாவா சொத்துக்கு வழங்கப்பட்ட பட்டா எண்.450 காலிமனைக்குரிய புதிய சர்வே எண்.241/31 என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரச்சனைக்குரிய இடம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. வாதியின் வீடானது என் வீட்டிற்கு கிழக்கே உள்ளது என்றால் சரிதான்.என் வீட்டில் கிழக்கு புறம் உள்ள இடம் காலியாக உள்ளது. தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் வழக்கு எண்.19/2021 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதி கழிவறை மற்றும் படிகட்டு கட்டியுள்ளார் என்றால் சரிதான். கிரைய பத்திரம் பதிவு செய்தவுடன் நாங்கள் இதே ஊரில் வசிக்கவில்லை குடும்பத்துடன் பெங்களூர் சென்று விட்டோம். கடந்த 20 ஆண்டுகளாக தாவா சொத்தில் எந்த பராமரிப்பும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் வாழை மரம் உள்ளது. மேற்படி தோராய பட்டா யூடிஆர் நத்தம் சர்வேயின் போது தோராய பட்டாவை சரியாக அளந்து வரைபடம் தயாரித்து தூய பட்டா வாங்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து காலியாக உள்ளது. தாவா சொத்து சம்மந்தமாக வாதிக்கு உரிமைகோரி வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான்.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate